மட்/கது/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

தரம் - 06	விஞ்ஞானம்	நேரம்: 2.00 மணித்தியாலம்
பெயர்/சுட்டெண் :		புள்ளிகள் :

பகுதி I

01. பின்வருவனவற்றுள் தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் பொதுவான இயல்பு அல்லாதது எது?
1) ஒளித்தொகுப்பு 2) போசணை 3) இனப்பெருக்கம் 4) வளர்ச்சி

02. வெளிச்சுவாசத்தின் போது வெளிவிடப்படும் வாயுவை இனங்காணப் பயன்படுத்தும் பதார்த்தம் எது?
1) தெளிந்த சுண்ணாம்பு நீர் 2) செப்புசல்பேற்று 3) கந்தகம் 4) சோடியம் ஐதரொட்சைட்

03. அருகில் காட்டப்பட்டுள்ள பரிசோதனை செய்யப்பட்டதன் நோக்கம் யாது?



1) வளிக்கு திணிவு உண்டு என அறிதல்
2) வளிக்கு கனவளவு உண்டு என அறிதல்
3) வளி வெளியில் இடத்தை கொள்ளும் என அறிதல்
4) வளிக்கு வடிவம் இல்லை என அறிதல்

04. பின்வருவனவற்றுள் நொருங்கும் திரவியம் எது?
1) கண்ணாடி 2) இறப்பர் 3) செம்பு 4) இரும்பு

05. நாம் நுகரக்கூடிய நீரின் சதவீதம் யாது?
1) 2.58% 2) 97.41% 3) 0.01% 4) 0.1%

06. பின்வருவனவற்றுள் சுவட்டெரிபொருள் அல்லாதது எது?
1) பெற்றோல் 2) நிலக்கரி 3) டீசல் 4) விறகு

07. மருத்துவத்துறையில் ஒளியியல் நார் கொண்டு அமைக்கப்பட்ட உபகரணம் எது?
1) போக்லைட் 2) என்டஸ்கோபி 3) மின்குமிழ் 4) லேசர்

08. பின்வருவனவற்றுள் இயற்கை ஒலி அல்லாதது எது?
1) காற்றின் ஒலி 2) பறவைகளின் ஒலி 3) நீர்வீழ்ச்சியின் ஒலி 4) விமானத்தின் ஒலி

09. பின்வருவனவற்றுள் மென்சவ்வு அதிர்வதால் ஒலியை உருவாக்கும் இசைக்கருவி எது?
1) கிற்றார் 2) மேளம் 3) சங்கு 4) வயலின்

10.



A



B

A ,B ,C ஆகிய காந்தங்கள் தொடர்பான சரியான கூற்று எது?

1) வலிமை கூடிய காந்தம் A ஆகும் 2) வலிமை கூடிய காந்தம் C ஆகும்
3) வலிமை கூடிய காந்தம் B ஆகும் 4) A ,C என்பன சமவலிமையுடையவை ஆகும்

11. LED யின் நியமக் குறியீடு எது?

1)

2) 



4)

kalvi.lk

12. அருகிலுள்ள உபகரணத்தின் பெயர் யாது?

1) இருவாயி 2) இறையோதைற்று

3) கல்வனோமானி 4) மின்கலம்

13. பின்வருவனவற்றுள் A எக்கரைசலாக காணப்படும் போது மின்குமிழ் ஒளிரும்?



1) பெற்றோல் 2) மண்ணெண்ணெய் 3) உப்புக் கரைசல் 4) காய்ச்சி வடித்த நீர்

14.



A



B

மேலே காட்டப்பட்ட A , B ஆகிய செயற்பாடுகள் வெப்பத்தின் எவ்விளைவைக்காட்ட மேற்கொள்ளப்படுகிறது?

1) திண்ம விரிவு, திரவ விரிவு 2) திரவ விரிவு, வாயு விரிவு

3) திண்ம விரிவு, வாயு விரிவு 4) திண்ம விரிவு, திரவ விரிவு

15. புல் → வெட்டுக்கிளி → கோழி → மனிதன்

மேலே தரப்பட்ட உணவுச் சங்கிலியில் 1ம் படி நுகரி எது?

1) புல் 2)வெட்டுக்கிளி 3)கோழி 4)மனிதன்

16. A. வளிமண்டல அமுக்கம்
B. மழைவீழ்ச்சி
C. காற்றின் வேகம்
மேலே தரப்பட்ட காரணிகளுள் வானிலையை தீர்மானிக்கும் காரணிகள் எவை?

1) A , B 2) B , C 3) A , C 4) A , B , C

17. அருகில் தரப்பட்ட உபகரணத்தால் அளவிடப்படும் கணியம் எது?
1) காற்றின் திசை 2) காற்றின் வேகம் 3) மழைவீழ்ச்சி 4) வெப்பநிலை



18. பிழையான கூற்றை தெரிவு செய்க
1) உணவுச்சங்கிலிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டு உணவு வலைகட்டியெழுப்பப்படுகிறது
2) உணவுச்சங்கிலியின் முதல் இணைப்பு உற்பத்தியாக்கிகளாகும்
3) உணவுச்சங்கிலின் இரண்டாம் இணைப்பு தாவரங்களை உணவாக எடுக்கும் விலங்குகளாகும்
4) உணவுச் சங்கிலியின் மூன்றாம் இணைப்பு எப்பொழுதும் அனைத்துமுண்ணிகளாகும்

19. சக்தி நெருக்கடி ஏற்படுவதற்கான காரணம்
1) சக்தி வீண்விரயம் 2) விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி
3) சனத்தொகை பெருக்கம் 4) மேற்கூறிய அனைத்தும்

20. தைனமோ இன்றி மின்சக்தி உற்பத்தி செய்யும் முறையாக அமைவது
1) நீர் மின் உற்பத்தி 2) காற்றாலை 3) வற்றுப்பெருக்கு 4) சூரியப்படல்

kalvi.lk

பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை அளிக்க.

01.A. எம்மைச் சுற்றி உள்ளவை சூழலாகும்.

1. உயிருள்ள அங்கிகள் கொண்டுள்ள சிறப்பியல்புகள் 04 தருக.

……………………………………………………………………………………………………

2. உயிருள்ள அங்கிகளின் 03 வகைகளும் எவை?

………………………… ………………………………. ………………………………

3. தாவரங்களிற்கும் விலங்குகளிற்கும் இடையிலான வேறுபாடுகள் 02 தருக.

4. அங்கிகளை வகைப்படுத்த இருகிளைச்சாவி பயன்படுத்தப்படுகின்றது.

யானை மயில் புலி மாமரம்

உணவை உற்பத்தி செய்வது | 1…………………………

2……………………..

யானை புலி 3…………….

4……………… | இறக்கை அற்றது

மயில்

யானை 5……………..

6……………………. | தும்பிக்கை அற்றது

யானை | 7………………

B. கீழே சில உயிரங்கிகளின் உணவுத் தொடர்புகள் காட்டப்பட்டுள்ளது. .



kalvi.lk

1. மேலுள்ள கட்டமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

…………………………………………………………………………………………………

2. மேலுள்ள கட்டமைப்பில் இருந்து நான்கு இணைப்புக் கொண்ட உணவுச் சங்கிலி ஒன்றை தருக.

…………………………………………………………………………………………………

3. அதில் தாவர உண்ணிகளைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………

4. இங்கு தாவரங்கள் ஒளித்தொகுப்புச் செய்வதால் அவை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

…………………………………………………………………………………………………

5. இங்கு பாம்புகள் இல்லாவிடின் இச்சூழலில் ஏற்படக்கூடிய மாற்றம் 01 தருக.

……………………………………………………………………………………………………

02.A. உயிரற்றவை யாவும் சடப்பொருட்களாகும்.

1. இப்பரிசோதனையில் குவளையை நீருக்குள் அமிழ்த்தும் போது உமது அவதானம் யாது?

………………………………………………………………………………………………….



2. இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் நோக்கம் யாது?

………………………………………………………………….

3. குவளையை சரிவாக நீரினுள் அமிழ்த்தினால் உமது அவதானம் என்ன?

…………………………………………………………………

Education கல்வி

4. திண்ம திரவ வாயுச் சடப்பொருட்களின் இயல்புகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இடைவெளி நிரப்புக.

சடப்பொருட்களின் நிலை	வடிவம்	கனவளவு
திண்மம்	திட்டமான வடிவம் உண்டு	A………………………..
திரவம்	B……………………...	C………………………
வாயு	திட்டமான வடிவம் இல்லை	D……………………….

5. பின்வரும் இயல்புகளுக்கான உதாரணம் ஒவ்வொன்று தருக.

1. வன்மை தன்மை : ………………………. 2. வாட்டல் தன்மை : …………………………….

3. மீள்தன்மை : ………………………… 4. நொருங்கும் இயல்பு :…………………………….

B. கரைந்துள்ள உப்புக்களின் அடிப்படையில் நீர் வகைப்படுத்தப்படும்.



kalvi.lk

1. மேலே செயற்பாட்டில் கரைந்துள்ள உப்பின் செறிவின் அடிப்படையில் நீரின் 03 வகைகளையும் குறிப்பிடுக.

X…………………….. Y………………………….. Z…………………..

2. நீர் கிடைக்கப் பெறும் மூலத்தின் அடிப்படையில் 03 வகைப்படும்.அவை எவை?

………………………………………………………………………………………

3. மேலே 2 இல் தரப்பட்ட வகைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

4. உயிரங்கிகளின் நிலவுகைக்கு நீரின் முக்கியத்துவம் 02 தருக.

…………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………

5. நீரின் பயன்கள் 02 தருக.

……………………………………………………………………………………………………

03. ஒளியும் பார்வையும்

A.1. ஒளி ஊடுகடத்தும் தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

…………………………………………………………………………………………………….

2. சந்திரன் ஒளிராப் பொருள் என அழைக்கப்படக் காரணம் யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

3. ஒளியின் பயன்கள் 02 தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

4. சூழல் சமனிலைக்கு ஒளியின் பங்களிப்பு யாது?

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

B. ஒலியும் கேட்டலும்

1. ஒலி எவ்வாறு உருவாக்கப்படுகின்றது?

………………………………………………………………………………………………

2. இயற்கை ஒலிக்கு உதாரணம் 01 தருக.

………………………………………………………………………………………………

3. இசைக்கருவிகளின் 03 வகைகளும் எவை?

……………………………………………………………………………………………….

4. மேலே இசைக்கருவிகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

……………………………………………………………………………………………….

………………………………………………………………………………………………

kalvi.lk

04.1.கீழே தரப்பட்டுள்ள காந்த வகைகளின் பெயர்களை தருக.



1………………… 2…………………. 3……………………. 4…………….

2. காந்தமொன்றின் முனைவுகள் எவை?

……………………………………………………………………………………………………

3. காந்தமொன்றின் முனைவு இடைத்தாக்கத்தை சோதிப்பதற்கான பரிசோதனை கீழேகாட்டப்பட்டுள்ளது.



உரு 7.7

a. A ன் வடமுனைவு B ன் தென்முனைவின் அருகே வரும் போது அவதானம் யாது?

……………………………………………………………………………………………………..

b. மேலே கூறப்பட்ட விடைக்கான காரணத்தை தருக.

……………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………....

4. காந்தமொன்றின் முனைவுகளை இனங்காண உதவும் உபகரணம் எது?

……………………………………………………………………………………………………..

B. எளிய மின்கலமொன்றின் அமைப்பு காட்டப்பட்டுள்ளது.



1. இங்கு அவதானம் யாது?

………………………………………………………………………………………….

2. எளிய மின்கலத்தின் குறைபாடு 01 தருக.

…………………………………………………………………………………………………….

……………………………………………………………………………………………………..

3. பின்வரும் மின்கூறுகளின் குறியீடுகளை தருக.

மின்கூறு	குறியீடு
மின்கலம்	
ஆளி	
மின்குமிழ்	
அம்பியர்மானி	

4. மின்னைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வழிகள் 02 தருக.

…………………………………………………………………………………………………….

………………………………………………………………………………………………………

5.A. வெப்பமும் அதன் விளைவுகளும்.



மேலே அமைப்பானது மாணவனொருவனால் வெப்ப விளைவை இனங்காண மேற்கொள்ளப்பட்டது.

1. வெப்பத்தின் எவ்விளைவை இனங்காண இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.?

……………………………………………………………………………………………..

2. இங்கு வளையம் மேலும் வெப்பப்படுத்தும் போது அவதானம் யாது?

…………………………………………………………………………………………………

3. நீரின் பௌதீக நிலைமாற்றம் தரப்பட்டுள்ளது.

பனிக்கட்டி —(A)→ நீர் —(B)→ நீராவி

a. A , B இல் நடைபெறும் செயற்பாடு எப்பெயரால் அழைக்கப்படும்?

....

b. பதங்கமாதல் என்றால் என்ன?

……………………………………………………………………………………..

kalvi.lk

05. வானிலையும் காலநிலையும்

1. வானிலை என்றால் என்ன?

…….

…….

2. வானிலையை தீர்மானிக்கும் காரணிகள் 04 தருக.

……..

……..

3. வெப்பநிலையை அளக்கும் உபகரணம் எது?

……..

4. இங்கு தரப்பட்டுள்ள அட்டவணையை கொண்டு விடையளிக்குக.

நாள்	உயர்வு வெப்பநிலை ⁰C	இழிவு வெப்பநிலை ⁰C	மழை வீழ்ச்சி mm	ஈரப்பதன் %
1	31.3	27.9	0	80
2	31.6	28.1	0	81
3	31.3	28.2	0	81
4	30.9	26.8	2.29	82
5	31.3	26.4	0.25	77
6	30.7	25.2	1.29	89
7	30.5	25.0	22.35	83
8	31.3	26.9	0.25	80
9	31.3	28.1	0	82
10	31.1	28.0	0	80

a. உயர்வு வெப்பநிலை சமனாக இருந்த தினங்கள் எவை?

……

b. இழிவு வெப்பநிலை சமனாக இருந்த தினங்கள் எவை?

…….

c. உயர்வ வெப்பநிலை குறைவாக இருந்த தினம் எது?

…….

d. மழை வீழ்ச்சி அதிகமாகக் காணப்பட்ட தினம் எது?

……..

B.1.சக்தி முதல் என்றால் என்ன?

………..

2. எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தும் விதமாக சக்தி முதல்களை சிக்கனமாக பயன்படுத்த நீர் முன்வைக்கும் யோசனை ஒன்றை தருக.

……….

3. சுவட்டு எரிபொருளுக்கு 02 உதாரணம் தருக.

………..

4. தற்போது இலங்கையின் மின் உற்பத்தி நிலையங்களில் பயன்படும் சுவட்டெரிபொருள் யாது?

……….

kalvi.lk

2025

1ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

ஆரம்பம் 01.01.2025

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457